www.Padasalai.Net www.TrbTnpsc.com

# T மூன்றாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு - 2025

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடு:-** **5×1=5**

1) திருநெல்வேலி ________ மன்னர்களோடு தொடர்புடையது

அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ

2) செல்வத்தின் பயன் ________ வாழ்வு

அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற

3) மரம் வளர்த்தால் ________ பெறலாம்

அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

4) 'காயிதே மில்லத்' என்னும் அரபு சொல்லுக்குச் ________ என்பது பொருள்

அ) சுற்றுலா வழிகாட்டி ஆ) சமுதாய வழிகாட்டி

இ) சிந்தனையாளர் ஈ) சட்ட வல்லுநர்

5) மனித வாழ்க்கையில் தேவைப்படுவது ________

அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு

**ஆ) பொருத்துக.**

6) சாந்தம் - உலகம்

7) மகத்துவம் - கருணை

8) தாரணி - உண்மை

9) இரக்கம் - சிறப்பு

10) தத்துவம் - அமைதி

**இ) எவையேனும்ஐந்து வினாக்களுக்கு ஒரு சொற்களில் விடையளி.** **5×2=10**

11) இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் - ஒப்பிடுக.

12) பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?

13) உலகம் நிலைதடுமாறக் காரணம் என்ன?

14) பாரி மகளிரின் பெயர்களை எழுது?

15) உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?

16) நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?

17) காக்கை ஏன் குயிலை குஞ்சைப் போகச் சொன்னது?

**ஈ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளி.** **3×4=12**

18) உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.

19) திருநெல்வேலிக்கும், தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

20) பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.

21) சாந்தம் பற்றி இயேசுகாவியம் கூறுவன யாவை?

22) ஆட்சிமொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



உ) பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:- 4+2=6

23) "மாரியொன்று இன்றி....... எனத் தொடங்கும் விருந்தோம்பல் பாடலை எழுதுக.

24) "பிறப்பொக்கும்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

ஊ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 10×1=10

25) பிரித்து எழுதுக:- i) நீருலையில் ii) எதிரொலித்தது

26) சேர்த்து எழுதுக:- i) மாரி+ஒன்று ii) ஓடை+எல்லாம்

27) கலைச்சொல் தருக: i) Cultivation ii) Responsibility

28) சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக:-

நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். __________ துன்பப்பட நேரிடும்.

(இல்லையென்றால்/அதனால்)

29) சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக

நெல்லையப்பர் கோவில் __________ உள்ளது?

30) தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.

என் தாயார் என்னை __________ காத்து வளர்த்தார்.

(கண்ணை இமை காப்பது போல் / தாயைக் கண்ட சேயைப் போல)

31) ஊர்ப்பெயரில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக: கன்னியாகுமரி

32) தொடரில் அமைத்து எழுதுக. i) குறிக்கோள் ii) சிந்தித்து

33) கீழ்க்காணும் தொடரில் உள்ள உவமை, உவமேயம், உவமஉருபு ஆகியவற்றைக் கண்டறிந்து எழுதுக. மலரன்ன பாதம்

34) இரட்டைக்கிளவி அமையுமாறு ஏதேனும் ஒரு தொடரை உருவாக்குக.

எ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:- 1×6=6

35) 'உண்மை ஒளி' படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக.

36) நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:- 1×6=6

37) 'என்னைக் கவர்ந்த நூல்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

38) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.

********

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com